தினமணி

**அரூரில் அரசு நெல் கொள்முதல் நிலையம் திறப்பு**

First Published : 12 Mar 2010 02:09:10 AM IST

அரூர், மார்ச் 11: அரூரில் தமிழக அரசின் நெல் கொள்முதல் நிலையம் திறக்கப்பட்டுள்ளது என வேளாண்மை உதவி இயக்குநர் இ.செல்வம் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் வியாழக்கிழமை வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு:

தருமபுரி மாவட்டத்தில் அரூர், தருமபுரி, பாலக்கோடு ஆகிய இடங்களில் தமிழ்நாடு நுகர் பொருள் வாணிபக் கழகத்தின் சார்பில் நெல் கொள்முதல் மையங்கள் திறக்கப்பட்டுள்ளன. 17 ஈரப்பதம் கொண்ட சன்னரக நெல் குவிண்டாலுக்கு ரூ.1100-ம், மோட்டா ரக நெல் குவிண்டாலுக்கு ரூ.1050-ம் கொள்முதல் விலையாக வழங்கப்படும். உள்ளூர் வியாபாரிகளிடம் விற்பனை செய்வதை விட குவிண்டாலுக்கு ரூ.100 வீதம் கூடுதலாக கிடைக்க வாய்ப்புள்ளது. தற்போது அரூர் அரசு மருத்துவமனை வளாகம் அருகேயுள்ள தமிழ்நாடு நுகர் பொருள் வாணிபக் கழகக் கிடங்கில் இந்த கொள்முதல் நிலையம் செயல்படுகிறது. இது குறித்து தகவல் பெற விரும்பும் விவசாயிகள் 04346-222054 என்ற தொலைபேசி எண்ணில் தொடர்பு கொள்ளலாம் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

**கலப்பட பருப்புகள் விற்பனையா?**

First Published : 12 Mar 2010 05:53:57 AM IST

உடுமலை, மார்ச் 11: கலப்பட பருப்புகள் விற்பனையில் உள்ளதா என, உடுமலையில் சுகாதார அதிகாரிகள் வியாழக்கிழமை திடீர் ஆய்வு மேற்கொண்டனர்.

÷உடுமலை பகுதிகளில் கலப்படம் செய்யப்பட்ட மற்றும் சாயமேற்படுத்தப்பட்ட துவரம் பருப்புக்கள், கடலை பருப்புக்கள் மற்றும் கடலை மாவு உள்ளிட்ட உணவு பொருட்கள் விற்பனை செய்யப்பட்டு வருவதாக புகார் இருந்து வந்தததது. இதைத் தொடர்ந்து, உடுமலை ஒன்றிய பகுதிகளில் உள்ள பல்வேறு கிராமங்களில் சுகாதாரத் துறையினர் வியாபார நிறுவனங்கள் மற்றும் மளிகை கடைகளில் வியாழக்கிழமை திடீர் சோதனைகளை நடத்தினர்.

÷எரிசனம்பட்டி, பெரியவாளவாடி, அமராவதி நகர், செல்லப்பம்பாளையம் ஆகிய அரசு ஆரம்ப சுகாதார நிலையங்களைச் சேர்ந்த அதிகாரிகள், அலுவலர்கள் இந்த சோதனைகளை நடத்தினர். இதில் பல்வேறு கிராமங்களில் உள்ள மளிகைக் கடை மற்றும் மொத்த விற்பனை நிலையங்களில் விற்பனைக்கு வைக்கப்பட்டிருந்த துவரம் பருப்பு, கடலை பருப்பு மற்றும் கடலை மாவு ஆகிய உணவு பொருட்கள் ஆய்வு செய்யப்பட்டன.

÷இந்த அதிரடி ஆய்வில் 18 மளிகை கடைகளில் சந்தேகத்துக்குரிய பருப்பு மாதிரிகள் எடுக்கப்பட்டு ஆய்வுக்கு அனுப்பி வைக்கப்பட்டன. உணவு கலப்பட சட்டத்தின் கீழ் பொது சுகாதார சட்ட விதிகளில் 1939-ன் படி கடைக்காரர்கள் முறையான உரிமம் பெற்றுள்ளனரா என்பதையும் சுகாதார விதி முறைகளின்படி பராமரிக்கப்பட்டு வருகின்றனவா என்பது குறித்தும் ஆய்வுகள் மேற் கொள்ளப்பட்டன.

÷சுகாதார மேற்பார்வையாளர் எஸ்.மகாராசன் தலைமையில் சுகாதார ஆய்வாளர்கள் பி.நாகதிருமூர்த்தி, பி.கிருஷ்ணமூர்த்தி, கே.சிவானந்தம், எம்.கோடீஸ்வரன் உள்ளிட்ட இந்த ஆய்வுகளை மேற்கொண்டனர்.

**மகளிர் தினத்தில் மரம் நடும் விழா**

First Published : 12 Mar 2010 05:55:40 AM IST

திருப்பூர், மார்ச் 11: 100-வது உலக மகளிர் தினத்தையொட்டி, திருப்பூரை அடுத்த 15வேலம்பாளையத்தில் மரக்கன்று நடும்விழா நடந்தது.

÷ஈஷோ யோகா பசுமைக்கரங்கள் திட்டம், பசுமை திருப்பூர் இயக்கம் சார்பில் நடத்தப்பட்ட இவ்விழாவில், 15வேலம்பாளையம் நகராட்சி தலைவர் எஸ்.பி.மணி முதல் மரக்கன்றினை நட்டுவைத்தார்.

÷தொடர்ந்து, விழாவில் கலந்து கொண்ட அனைவரும் மரக்கன்றுகள் நட்டுவைத்தனர். விழாவில் பங்கேற்ற அனைவருக்கும், பசுமை திருப்பூர் இயக்க ஒருங்கிணைப்பாளர் ஸ்வாமிபலநேத்ரா மரக்கன்றுகளை இலவசமாக வழங்கினார். நகராட்சி துணைத்தலைவர் த.சரோஜா நன்றி கூறினார்.

**ரூ. 47 லட்சத்துக்கு பருத்தி ஏலம்**

First Published : 12 Mar 2010 05:40:24 AM IST

நாமக்கல், மார்ச் 11: நாமக்கல்லில் வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனை சங்கத்தில் வியாழக்கிழமை நடந்த ஏலத்தில் ரூ. 47 லட்சத்துக்கு பருத்தி விற்பனை நடந்தது.

நாமக்கல்-திருச்செங்கோடு சாலையில் அமைந்துள்ள இந்த சங்கத்தில் வாரந்தோறும் வியாழக்கிழமை பருத்தி ஏலம் நடைபெறும். சேலம், கரூர், நாமக்கல், ஈரோடு, திருச்சி மாவட்டங்களைச் சேர்ந்த விவசாயிகள் தங்களது பருத்தியை ஏலத்துக்கு கொண்டு வருவது வழக்கம். மதுரை, திண்டுக்கல், கோவை, திருப்பூர், நாமக்கல், ஈரோடு மாவட்டங்களைச் சேர்ந்த ஜவுளி வியாபாரிகள், பருத்தி வியாபாரிகள் இந்த ஏலத்தில் பங்கேற்று பருத்தியை கொள்முதல் செய்கின்றனர். தற்போது, புரட்டாசி பட்ட பருத்தி ஏலத்துக்கு வருகிறது. வியாழக்கிழமை (மார்ச் 11) நடந்த ஏலத்தில் 4,500 மூட்டைகள் ஏலத்துக்கு வந்தன.

ஆர்சிஹெச் ரகம் ரூ. 3,100 முதல் ரூ. 3,500 வரை விலை போனது. டிசிஹெச் ரகம் ரூ.4 ஆயிரம் முதல் ரூ.4,500 வரை விலைபோனது. விதை பருத்திக்கு நல்ல விலை கிடைத்தது. சுரபி ரக விதை ரூ. 4 ஆயிரம் முதல் ரூ. 4,400 வரை விலைபோனது. ஆத்தூர் வட்டாரத்தைச் சேர்ந்த விதை வியாபாரிகள் இவற்றை கொள்முதல் செய்தனர். 4,500 மூட்டைகளும் ரூ. 47 லட்சத்துக்கு ஏலம் போயின.

**பவானிசாகர் நீர்மட்டம் 79.01 அடி**

First Published : 12 Mar 2010 05:36:55 AM IST

ஈரோடு, மார்ச் 11: பவானிசாகர் அணை நீர்மட்டம் வியாழக்கிழமை 79.01 அடியாக இருந்தது.

அணைக்கு விநாடிக்கு 801 கனஅடி வீதம் தண்ணீர் வந்தது. அணையிலிருந்து ஆற்றில் விநாடிக்கு 600 கன அடியும், பாசனக் கால்வாயில் விநாடிக்கு 5 கன அடியும் தண்ணீர் திறக்கப்பட்டது. அணை நீர் இருப்பு 15.17 டிஎம்சி.

**தேங்காய் பருப்பு: விவசாயிகளிடமிருந்து நேரடி கொள்முதல் செய்ய ஈரோடு எம்பி வலியுறுத்தல்**

First Published : 12 Mar 2010 05:36:44 AM IST

ஈரோடு, மார்ச் 11: தேங்காய் பருப்பினை விவசாயிகளிடமிருந்து நேரடியாக கொள்முதல் செய்ய மத்திய அரசு நடவடிக்கையெடுக்க வேண்டும் என்று மக்களையில் ஈரோடு எம்பி கணேசமூர்த்தி (படம்) வலியுறுத்தியுள்ளார்.

மக்களவை பட்ஜெட் கூட்டத் தொடரில் பங்கேற்று அவர் பேசியது:கடும் வறட்சியால் விளைச்சல் குறைந்ததாலும், வெள்ளப்பெருக்கினால் விளைந்த பொருட்கள் சேதமடைந்ததாலும், உணவுப்பொருட்களின் விலை கடுமையாக உயர்ந்துள்ளது என்று மத்திய அரசு தெரிவித்துள்ளது. ஆனால் வறட்சி மற்றும் வெள்ளப்பெருக்கினை கட்டுப்படுத்த மத்திய அரசு நிரந்தர தீர்வினை அறிவிக்கவில்லை.

நதிகள் அனைத்தையும் தேசியமயமாக்குதல், விவசாய விளை பொருட்களின் கொள்முதல் விலை உயர்த்தப்பட்டுள்ளதே, அத்தியாவசிய பொருட்களின் விலை உயர்வுக்கு முக்கிய காரணம் என்று மத்திய அரசு அறிவித்துள்ளது.

மத்திய அரசு அறிவித்துள்ள விளை பொருட்களுக்கான கொள்முதல் விலை, உற்பத்தி செலவினை ஈடுகட்டும் அளவில் இல்லை.

கேரளத்தில் தேங்காய் பருப்பு விவசாயிகளிடமிருந்து நேரடியாக கொள்முதல் செய்யப்படுகிறது.

தமிழகத்தில் வியாபாரிகளிடமிருந்து மட்டுமே கொள்முதல் செய்யப்படுகிறது. இதனால் விவசாயிகளுக்கு பெருமளவில் இழப்பு ஏற்படுகிறது.

நாடாளுமன்றத்தில் உறுப்பினர்களின் கேள்விகளுக்கு பிரதமர் மற்றும் அமைச்சர்கள் அளிக்கும் பதிலை உறுப்பினர்களின் தாய் மொழியில், உடனடியாக மொழிமாற்றம் செய்து வழங்கவேண்டும்.

போரினால் பாதிக்கப்பட்ட இலங்கை தமிழர்களுக்கு வழங்கப்படும் புனர்வாழ்வு நிதி, அங்கு முறையாக பயன்படுத்துகிறதா என்பதை மத்திய அரசு ஆய்வு செய்ய வேண்டும் என்றார்.

தினமலர்

**பயறுவகை பயிர்களுக்கு மானியத்தில் டி.ஏ.பி., பயன்பெற வேளாண் அதிகாரி வேண்டுகோள்**

கிள்ளை: பயறு வகைப் பயிர்கள் அதிக மகசூல் பெற டி.ஏ.பி., உரக்கரைசலை தெளிக்க வேண்டும் என வேளாண்துறை அறிவுறுத்தியுள்ளது.வேளாண் உதவி இயக் குனர் தனசேகர் விடுத் துள்ள செய்திக்குறிப்பு:பயறு வகைப் பயிர்கள் அதிக காய் பிடிப்பதற்கு நல்ல திரட்சியான விதைகளை பெறவும், அதிக மகசூல் பெறவும் டி.ஏ.பி., கரைசலை அவசியம் தெளிக்க வேண்டும். பயறு வகைப் பயிர்கள் பூக்கும் தருணத்தில் ஒரு முறையும், 15 நாட்கள் கழித்து இரண்டாவது முறையும் இலைவழி மூலமாக தெளிக்க வேண்டும்.

ஒரு ஏக்கருக்கு 4 கிலோ டி.ஏ.பி., உரத்தினை முதல் நாள் 10 லிட்டர் தண்ணீரில் ஊறவைத்து மறு நாள் தெளிந்த நீரை மட்டும் வடிகட்டி அதனுடன் 190 லிட்டர் தண்ணீர் கலந்து கை தெளிப்பான் மூலம் மாலை நேரத்தில் செடிகள் நன்கு நனையுமாறு தெளிக்க வேண்டும்.தேசிய வேளாண் வளர்ச்சித் திட்டத்தின் கீழ் பயறுவகை பயிர்களுக்கு டி.ஏ.பி., ஒரு எக்டேருக்கு 25 கிலோ வீதம் 200 ரூபாய் மானியத்தில் தில்லைவிடங்கன், கிள்ளை, பிச்சாவரம், பி.முட் லூர் பூவாலை மற்றும் கீழமணக்குடி தொடக்க வேளாண் கூட்டுறவு வங்கிகளில் வழங்கப் படுகிறது. தேவையான விவசாயிகள் தங்கள் பகுதி உதவி வேளாண் அலுவலரை தொடர்பு கொண்டு டி.ஏ.பி., உரத்தினை மானிய விலையில் பெற்று பயன்பெறலாம் என தெரிவித்துள்ளார்.

**தமிழகத்தில் ஈமு கோழி வளர்ப்பு தொழில் நசிகிறது : உதவியை எதிர்பார்க்கும் பண்ணையாளர்கள்**

தாண்டிக்குடி: நசிந்து வரும் ஈமுகோழி வளர்ப்பு தொழில் லாபகரமாக செயல்பட பண்ணையாளர்கள் அரசின் உதவியை எதிர்பார்த்துள்ளனர்.திண்டுக்கல் மாவட்டம் தாண்டிக்குடி அருகே உள்ள கும்பரையூரில் ஈமு கோழி பண்ணை உள்ளது. இந்த பகுதியில் நிலவும் சீதோஷ்ண நிலை ஏற்றதாக உள்ளதால் ஈமு கோழிகள் இங்கு வளர்க்கப்படுகிறது. 3 ஆண்டுகளுக்கு பிறகு முட்டையிடும் பருவத்திற்கு தயாராகும் இந்த கோழிகள் 35 முதல் 40 ஆண்டு ஆயுள் கொண்டது. 40 முதல் 60 கிலோ., எடை கொண்டதாக இருக்கும்.

அக்டோபர் முதல் மார்ச் வரை முட்டையிடும் காலமாகும். ஆண்டுக்கு 20 முதல் 25 முட்டைகள் ஒரு கோழி மூலம் கிடைக்கும். முட்டை 350 கிராம் முதல் 900 கிராம் வரை எடையுள்ளதாக இருக்கும். முட்டையிட்ட ஐந்தாவது நாளில் இருந்து முட்டைகள் மிஷின் மூலம் 52 நாள் சீரான வெப்ப நிலையில் வைக்கப்பட்டு குஞ்சுகள் பொரிக்கப் படும்.சராசரியாக 5 அடி முதல் 6 அடி உயரம் கோழிகள் வளரும்.நோய் பாதிப்பின்றி பாதுகாப்பான சூழலில் வளர்க்கலாம்.கோழியின் தோல் மூலம் பர்ஸ்,கீ ஜெயின்,பேக் உள்ளிட்ட தோல் சம்மந்தப்பட்ட பொருட்கள் செய்ய பயன்படுகிறது. முட்டை ஓடுகள் அலங்கார பொருட்களாக பயன் பாட்டில் உள்ளது. ஈமு கோழி முட்டை, இறைச்சி, எண்ணெய், குஞ்சுகள் பல ஆயிரம் மதிப்பு கொண்டது.

புதுச்சேரியைச் சேர்ந்த ஜெகன் மோகன் கூறுகையில்: கடந்த ஐந் தாண்டுகளாக ஈமு கோழி வளர்ப்பு தொழில் ஈடுபட்டுள்ளேன். லாப நோக்கக்கோடு உள்ள இத்தொழில் வீண் வதந்திகளால் தற்போது நசிந்து வருகிறது. சிறு பண்ணையாளர்கள் ஏமாற்றப் பட்டு தொடர்ந்து நஷ்டத்தை சந்தித்து கோழி வளர்ப்பில் ஆர்வம் காட்டாமல் உள்ளனர். ஈமு கோழி வளர்ப்பு தொழில் தமிழகத்தில் வெகுவாக பாதித்துள்ளது. புதுச்சேரி, ஆந்திரா, மகாராஷ்டிரா,குஜராத் பகுதிகளில் இத்தொழிலில் ஈடுபடும் பண்ணையாளர்களுக்கு அரசே மானியம் வழங்குகிறது.தமிழகத்திலும் ஈமு கோழி வளர்ப்பவர்களுக்கு அரசு மானியம் கொடுத்தால் இந்த தொழிலில் நல்ல லாபம் பெற முடியும் என்றார்.

**சாத்துக்குடி விலை குறைவு: பிற பழங்கள் அதிகரிப்பு**

திண்டுக்கல்: வரத்து அதிகரிப்பால் சாத்துக்குடி விலை குறைந் தது. பிற பழங்கள் விலை அதிகரித்துள்ளன.திண்டுக்கல் மாவட்டத் திற்கு சாத்துக்குடி பழவரத்து தற்போது அதிகரித் துள்ளது.சில வாரங்களுக்கு முன் கிலோ 80 ரூபாய்க்கு விற்ற சாத்துக் குடி, நேற்றைய நிலவரப் படி கிலோ 30 ரூபாய்க்கு விற்பனையானது.

ஆப்பிள், மாதுளை, திராட்சை பழங்களின் விலை,கிலோவிற்கு 20 ரூபாய் முதல் 50 ரூபாய்வரை அதிகரித்துள்ளது. ஒரு கிலோ வாஷிங்டன் பச்சைநிற ஆப்பிள் 130 ரூபாயாகவும்,சிவப்புநிற ஆப்பிள் 100 ரூபாயாகவும் இருந்தது.நேற்று பச்சை ரக ஆப்பிள் கிலோ 170 ரூபாய்க் கும், சிவப்பு நிற ஆப்பிள் 130 ரூபாய்க்கும் விற்றது. 90 ரூபாயாக இருந்த வலை ஆப்பிள் 115, 80 ரூபாயாக இருந்த ஐஸ்கிரீம் ஆப்பிள் 110, 120 ரூபாயாக இருந்த காபூல் மாதுளை 140, 70 ரூபாயாக இருந்த வெள்ளை ரக ஆப்பிள் 90 ஆக விலை உயர்ந்துள்ளன.கிலோ 35 ரூபாயாக இருந்த ஆரஞ்சு 50, மஸ்கட் திராட்சை 70, பன்னீர் திராட்சை 50 ஆகிய விலைகளில் விற்றது.

**தேயிலையை தொடர்ந்து பருப்பில் கலப்படம் : சுகாதாரத்துறை அதிகாரிகள் திடீர் ஆய்வு**

மார்த்தாண்டம்: மார்த்தாண்டம் சுற்றுவட்டாரப் பகுதிகளில் உள்ள மளிகை கடையில் விற்பனை செய்யப்படும் பருப்பில் கலப்படம் உள்ளதா என்று சுகாதாரத்துறை அதிகாரிகள் திடீர் என்று ஆய்வு செய்தனர்.
கன்னியாகுமரி மாவட்டத்தில் டீக்கடை மற்றும் ஹோட்டல்களில் பயன்படுத்தப்படும் டீ தூள்களில் கலப்படம் சேர்க்கப்படுவதாக அதிகாரிகளுக்கு புகார்கள் அனுப்பப்பட்டன. பால் கட்டண உயர்வை தொடர்ந்து டீயின் கட்டணமும் உயர்த்தப்பட்டது.இருப்பினும் டீ தூளில் கலப்படம் செய்யப்பட்டு வந்தது.

இதனை தொடர்ந்து கடந்த வாரம் கிள்ளியூர் ஒன்றிய பகுதியில் அதிகாரிகள் திடீர் என்று ஆய்வு செய்து கலப்பட டீ தூள்களை கைப்பற்றி அழித்தனர். இந்நிலையில் பருப்பிலும் கலப்படம் சேர்க்கப்படுவதாக புகார்கள் சென்றன.இதனை தொடர்ந்து கன்னியாகுமரி மாவட்ட சுகாதார பணிகள் துணை இயக்குனர் டாக்டர் மதுசூதனன் உத்தரவின் படி கிள்ளியூர் வட்டார சுகாதார மேற்பார்வையாளர் ஜெயக்குமார், சுகாதார ஆய்வாளர்கள் செல்வன், ரெஞ்சித்குமார், ஜீவகுமார் ஆகியோர் நட்டாலம், பம்மம், இரவிபுதூர்க்கடை, முள்ளங்கினாவிளை, கருங்கல் பகுதிகளில் உள்ள மளிகை கடைகளில் விற்பனை செய்யப்படும் பருப்பு வகைகளை ஆய்வு செய்தனர்.கலப்பட பருப்பு வகை உணவுகளால் வாதம் சம்பந்தப்பட்ட நோய்கள் ஏற்பட வாய்ப்பு உள்ளதால் கலப்பட பருப்பு வகைகளின் வியாபார பயன்பாட்டை தவிர்க்குமாறு அதிகாரிகள் அறிவுரை வழங்கினர்.

**தோட்டக்கலை பயிரில் கூடுதல் மகசூல் சொட்டுநீர் பாசனம் அமைக்க யோசனை**

நாகை: கோடை காலத்தில் தோட்டக்கலை பயிரில் கூடுதல் மகசூல் பெற சொட்டு நீர்பாசனம் மேற்கொள்ள விவசாயிகளுக்கு தோட்டக்கலைத்துறை இயக்குனர் (பொ) கணேசன் யோசனை தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு:நாகை மாவட்டத்தில் தோட்டக்கலை பயிர்களான மலர், காய்கறி, பழமரப்பயிர்கள், வாழை மற்றும் தென்னை, கரும்பு சாகுபடி செய்யும் விவசாயிகள் குறைந்த நீரைக்கொண்டு, மிகக்குறைந்த ஆட்கள் உதவியுடன் சிக்கனமாக பாசனம் செய்ய சொட்டு நீர் பாசனம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. தோட்டக்கலைத்துறை, வேளாண் துறை, வேளாண் பொறியியல் துறை மற்றும் சர்க்கரை ஆலை நிறுவனங்கள் மூலம் இத்திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.சொட்டு நீர் பாசனம் அமைக்கும் விவசாயிகளுக்கு ஆகும் மொத்த செலவில் மத்திய அரசு பங்காக 40 சதவீத மானியம், மாநில அரசு பங்காக 25 சதவீத மானியம் என மொத்தம் 65 சதவீத மானியம் தற்போது வழங்கப்பட்டு வருகிறது.எனவே தோட்டக்கலை பயிர் சாகுபடி செய்யும் விவசாயிகள் தங்கள் பங்காக 35 சதவீதத்தை மட்டுமே செலுத்தி சொட்டுநீர் பாசனம் அமைக்கலாம். இதனால் பயிர்களுக்கு நிரந்தரமாக நல்ல ஈரப்பதம், காற்றோட்டம் கிடைப்பதால் அதிக மகசூல் பெறலாம். முக்கியமாக செம்பனார்கோவில் ஒன்றியத்தில் கஞ்சாநகரம், கிடாரங்கொண்டான், பொன்செய் ஆகிய கிராமங்களில் வாழை சாகுபடி செய்துள்ள விவசாயிகள் கோடை காலத்தை சமாளிக்க சொட்டு நீர் பாசனத்தை பயன்படுத்திக்கொள்ளலாம்.

மேலும் நீரில் கரையும் உரங்களை எளிதாக சொட்டுநீர் பாசனம் மூலம் பயிர்களுக்கு வழங்கலாம். நிதியாண்டு நிறைவடையும் தருணத்தில் இத்திட்டத்தில் விவசாயிகள் இணைந்து நடப்பாண்டிலேயே சொட்டு நீர்பாசனத்திற்கான

மானியத்தொகையை பெறலாம்.எனவே சொட்டு நீர் பாசனம் மேற்கொள்ள ஆர்வமுள்ள விவசாயிகள் தங்கள் பகுதியை சேர்ந்த தோட்டக்கலை துறை, வேளாண் துறை, வேளாண் பொறியியல் துறை மற்றும் சர்க்கரை ஆலை அலுவலர்களை தொடர்பு கொண்டு பயன்பெறலாம்.

**பட்டு வளர்ச்சித் துறை சார்பில் நலத்திட்ட உதவி வழங்கல்**

நாமக்கல்: நாமக்கல் மாவட்ட பட்டு விவசாயிகளுக்கு பட்டு வளர்ச்சித்துறை சார்பில் ரூ. 8 லட்சம் மதிப்பில் மானியம், நலத்திட்ட உதவி வழங்கப்பட்டன. மாவட்ட கலெக்டர் அலுவலக வளாகத்தில் நடந்த விழாவுக்கு கலெக்டர் சகாயம் தலைமை வகித்தார். பட்டுவளர்ச்சித் துறை உதவி இயக்குனர் கோபால்சாமி முன்னிலை வகித்தார். விழாவில் பட்டு விவசாயிகளுக்கு 2009-2010ம் ஆண்டுக்கான கிரியா ஊக்கித் திட்டத்தின் கீழ் ரூ. 1 லட்சத்து 50 ஆயிரம் மதிப்பில் நவீன புழுவளர்ப்பு மனைக்கான அரசு மானியம் 75 ஆயிரம் ரூபாய் வீதம் பத்து நபர்களுக்கு மொத்தம் 7 லட்சத்து 50 ஆயிரம் ரூபாயும், தலா 30 ஆயிரம் ரூபாய் மதிப்பில் இரு நபர்களுக்கு 60 ஆயிரம் ரூபாய் மதிப்பிலான மானியப் பொருட்களும் வழங்கப்பட்டன. பட்டு வளர்ச்சித்துறை அலுவலர்கள், விவசாயிகள் உட்பட பலர் பங்கேற்றனர்.

**தமிழகத்தில் தரமற்ற விதை விநியோகம் 442 நிறுவனங்கள் மீது வழக்கு பதிவு : இயக்குனர் கார்முகிலன் தகவல்**

புதுக்கோட்டை: தமிழகத்தில் தரமற்ற விதை உற்பத்தி மற்றும் விதை விநியோகம் செய்த 442 நிறுவனங்கள் மீது வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளதாக தமிழக விதைச்சான்றளிப்புத்துறை இயக்குனர் கார்முகிலன் கூறினார்.புதுகை மாவட்டம் குடுமியான்மலை வேளாண் விரிவாக்க மேலாண்மை மையத்தில் தமிழக விதைச்சான்றளிப்புத் துறையின் மாநில அளவிலான விதை ஆய்வு அலுவலர்களுக்கான கருத்தரங்கு நடந்தது.

விழாவில் கலெக்டர் சுகந்தி தலைமை வகித்து பேசியதாவது@ காலமுறைக்கேற்ப தொழில் நுட்ப மாற்றத்தை ஏற்கும் வகையில் விவசாயிகளின் ஏற்கும் திறனை உருவாக்கி, விவசாயிகளின் பொருளாதார திறன், சமுதாய சிந்தனையை அடிப்படையாக கொண்டு அதிக சந்தை விலை கிடைக்கும் வகையில் பயிர்திட்ட செயலாக்கம் விரைவு படுத்தப்பட வேண்டும். விதைசான்றளிப்புத்துறை தரமான விதைகளை தொடர்ந்து விவசாயிகளுக்கு கிடைக்க செய்ய வேண்டும். அரசின் திட்டப்பயன்கள் தகுதியான விவசாயிகளுக்கு சென்றடையும் வகையில் வேளாண்துறையினர் பணியாற்ற வேண்டும். இவ்வாறு அவர் பேசினார்.

கருத்தரங்கில் தமிழக விதைசான்றளிப்புத்துறை இயக்குனர் கார்முகிலன் பேசியதாவது@ விவசாயிகளுக்கு விதைகளை விற்பனை செய்யும் நிறுவனத்தினர் தரமான விதைகளை விற்பனை செய்கிறார்களா என்பதையும், அந்த பகுதி மற்றும் பருவத்திற்கேற்ற விதைகளை விற்பனை செய்வதையும், மேலும் அறிவிக்கப்படாத புதிய வீரிய மற்றும் ரக உண்மை நிலை விதைகளுக்கான சாகுபடி விபரங்களை விவசாயிகளுக்கு வழங்குவதையும் விதை ஆய்வு பிரிவில் பணியாற்றும் விதை ஆய்வு அலுவலர்கள் கண்காணித்து வருகின்றனர். 2009-10ம் ஆண்டில் இதுவரை 53ஆயிரத்து602 விதை விற்பனை நிலையங்கள் ஆய்வு செய்யப்பட்டுள்ளது.

இவைகளில் 46ஆயிரத்து319 விற்பனை நிலையங்களில் விதை மாதிரிகள் எடுக்கப்பட்டுள்ளன. இவைகளில்

ஆயிரத்து740 தரமற்ற விதை குவியல்களுக்கு விற்பனை தடைஉத்தரவு வழங்கப்பட்டுள்ளது. தடை உத்தரவு வழங்கப்பட்ட விதையின் அளவு 2ஆயிரத்து596 மெ.டன். தரமற்ற விதை உற்பத்தி மற்றும் விதை விநியோகம் செய்த 442 நிறுவனங்கள் மீது வழக்கு பதிவு செய்யப்பட்டு அதில் 328 வழக்குகள் தீர்வு செய்யப்பட்டு அபராதம் விதிக்கப்பட்டுள்ளன. இவ்வாறு அவர் பேசினார். இதில் விதைசான்று இணை இயக்குனர் சுப்பிரமணியன், புதுகை வேளாண் இணை இயக்குனர் கிருஷ்ணசாமி, வேளாண் வணிக துணை இயக்குனர் தங்கவேலு, கலெக்டரின் நேர்முக உதவியாளர் ராஜு, விதைசான்று உதவி இயக்குனர்கள் அண்ணாமலை, ஜெயராஜ் உட்பட பலர் கலந்து கொண்டனர். தஞ்சை விதை ஆய்வு துணை இயக்குனர் அன்பழகன் வரவேற்றார். விதை ஆய்வு இணை இயக்குனர் துரைசாமி நன்றி கூறினார்.

**விவசாய மானிய திட்டத்தில் ஏமாற்றம் : முதலீடும் வீணாகியதால் தவிப்பு**

ராமநாதபுரம்: விவசாயிகளுக்கான மானிய ஆழ்குழாய் கிணறு அமைக்கும் திட்டம் துவங்கி பல மாதங்களாகியும், பயனாளிகளுக்கு மின் இணைப்பு கிடைக்காததால், முதலீடு வீணாகி நஷ்டத்தை சந்திக்கும் சூழல் ஏற்பட்டுள்ளது.தமிழக அரசு பிற்பட்ட மற்றும் மிகவும் பிற்பட்டோர் துறை மூலம் குறு மற்றும் சிறு விவசாயிகளுக்கு, 50 சதவீத மானியத்தில் ஆழ்குழாய் கிணறு அமைக்க நிதி உதவி செய்கிறது.இதற்காக விவசாயிகள் தங்களது பகுதியில் உள்ள தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கிகள் மூலம், ஒரு லட்சம் ரூபாய் கடன் பெற்று திட்டத்தை துவங்கலாம். இதை பிற்பட்டோர் நலத்துறை அதிகாரிகள் ஆய்வு செய்து, உரிய சான்றிதழ் வழங்கியபின் ,அந்தந்த வங்கிகளில்விவசாயிகள் கடன் பெற்று ஆழ்குழாய் கிணறு அமைத்துள்ளனர். திட்டம் துவங்கி ஆறு மாதங்களுக்கு மேலாகிவிட்டது.

ஆனால் இதுவரை மின் இணைப்பு கிடைக்காததால் விவசாய பணிகளை துவங்க முடியாமல் உள்ளனர். திட்டத்தில் துளிஅளவுகூட பயனில்லாமல் உள்ளதால் ,விவசாயிகள் கடும் அதிருப்தியில் உள்ளனர். ராமநாதபுரம் மாவட்டம் வறட்சியாக உள்ளதால் விவசாயமும் தொடர்ந்து பொய்த்து வருகிறது. காலம்தவறிய பருவ மழை போன்ற காரணத்தால், ஒவ்வொரு ஆண்டும் விவசாயிகள் பெரும் நஷ்டத்தை சந்தித்து ஏமாற்றமடைகின்றனர். பல விவசாயிகள் தொழிலை விட்டு, கட்டட கூலி தொழிலுக்கு செல்வதும், சில விவசாயிகள் வெளிமாவட்டங்களுக்கு இடம் பெயர்வதும் தொடர் கிறது. அரசு அறிவித்த திட்டம் விவசாயிகளுக்கு ஓரளவு ஆறுதலை ஏற்படுத்தினாலும், அதிகாரிகளின் அலட்சியத்தால் திட்டம் துவங்கியும் பலனின்றி உள்ளது.இதில் பாதிக்கப்பட்ட விவசாயிகளின் குமுறல்கள்: கோதண்டபாணி: ஆழ்குழாய் கிணறு அமைக்க மானியத்துடன் ஒரு லட்சம் ரூபாய் கடன் வாங்கினேன். திட்டம் முடிய எனக்கு 1.75 லட்சம் வரை செலவாகியது. செலவானாலும் பராவாயில்லை, விவசாயம் செய்யலாம் என்றால் ,மின்சாரம் இல்லாததால் ஆழ்குழாய் அமைத்தும் பலனில்லாமல் உள்ளது. மகேஸ்வரன்: மின்சாரம் இல்லாததால் ,போர் தூந்து போகிறது. ஏற்கனவே நஷ்டத்தில் இருக்கும் விவசாயிகளுக்கு ,புதிய திட்டம் என கூறி மேலும் நஷ்டத்தை ஏற்படுத்திவிட்டனர்.

மகேஸ்வரி: மின்சார இணைப்பிற்காக அதிகாரிகளை கேட்டால் பிற்பட் டோர் அலுவலகத்தில் கேளுங்கள் எனவும் ,அவர் களை கேட்டால் ,உரிய அனுமதி இன்னும் வரவில்லை எனவும் குழப்பமான பதிலை கூறுகின்றனர். நடவடிக்கை உண்டாம் : ராமநாதபுரம் மின்வாரிய மேற்பார்வை பொறியாளர் விஜயகுமார் கூறுகையில்,"" பழத்தோட்டம் என குறிப்பிட்டிருந்தால் அது வியாபார நோக்கில் வருவதால், இலவச மின்சாரம் கொடுக்க முடியாது. விவசாயிகள் எந்த திட்டத்தில் பெற்றுள்ளனர் என்பதை தெரிந்து கொண்டு, அவர்களுக்கு உடனடியாக மின் இணைப்பு கிடைக்க உரிய நடவடிக்கை எடுக்கப்படும்,'' என்றார்.

**மழை குறைவு- கோடை உக்கிரம் : பழங்கள் விளைச்சல் பாதிப்பு**

மானாமதுரை: போதிய மழை இல்லாததால் மானாமதுரையில் மா, சப்போட்டா உள்ளிட்ட பழங்களின் விளைச்சல் கேள்விக்குறியாகியுள்ளது. இப்பகுதி செம்மண் பூமியாக இருப்பதால், தோட்ட பயிர் வளர்ப்பதில் விவசாயிகள் ஆர்வம் காட்டுகின்றனர். இதனால் நூறுக்கும் மேற்பட்ட பழ பண்ணைகள் உருவாகியுள்ளன. இவை தவிர தென்னை, வாழை தோட்டங்களில் ஊடு பயிராகவும் மா, சப்போட்டா, தர்பூசணி நடவு செய்யப்பட்டுள்ளன.பழ தோட்டங்கள் அதிகளவில் உருவாகியுள்ள நிலையில், பருவ மழை எதிர்பார்த்த அளவு இல்லை. தற்போது வெப்பம் அதிகரித்துள்ளதால், நீர்நிலைகளும் வறண்டு விட்டன. இதனால் பழ மரங்கள் வாடி வருகின்றன.

இதுகுறித்து விவசாயி மணி கூறுகையில், ""மா, சப்போட்டா, முந்திரி மரங்கள் இம்மாதத்தில் பூக்கும். மழை பொய்த்ததால், பூக்கள் குறைவாக பூத்துள்ளன. கோடை அதிகரித்திருப்பதால், அவையும் கருகி வருகின்றன. மழைக்கு முன் ஏக்கருக்கு 25 ஆயிரம் வரை செலவு செய்துள்ள நிலையில், விளைச்சல் பாதிப்பால் கடும் நஷ்டம் ஏற்படும், " என்றார்.தீர்வு: கடந்த பத்து ஆண்டுகளாக மழை குறைந்து வருகிறது. சாதாரண விவசாயத்தில் இருந்து தோட்டப்பயிர்களுக்கு மாறிய விவசாயிகளுக்கு தற்போதும் சோதனை தொடர்கிறது. இந்த அவலத்தை போக்க நீர் நிலை ஆக்கிரமிப்புகளை அகற்ற வேண்டும். நிலத்தடி நீர் ஆதாரத்தை மேம்படுத்தும் முயற்சிகளையும் துவக்க வேண்டும்.

**காய்கறி வரத்து குறைந்தது**

தேவாரம்: கோடையின் தாக்கம் அதிகரித்துள்ளதால் தேவாரம் தினசரி மார்க்கெட்டிற்கு காய்கறி வரத்து குறைந்துள்ளது. மார்க்கெட்டிற்கு சீசன் நேரத்தில் 200 டன் காய்கறி வரத்திருக்கும். தற்போது 10 சதவீத அளவில் 20 டன்னிற்கு குறைவாக காய்கறி வரத்துள்ளது. நடப்பு வாரத்தில் விலை நிலவரம் ஒரு எடை (10 கிலோ), வுக்கு வெண்டிக் காய் 80 ரூபாய் முதல் 100 ரூபாய் வரை, கத்தரிக்காய் 80 - 100 ரூபாய் வரை, பாகற்காய் 60-70, பீட்ரூட் 40 -50, அவரை 50 -60 , தக்காளி ஒரு பெட்டி (15 கிலோ), 40 - 50 , பீன்ஸ் ஒரு கிலோ 20 ரூபாய்க்கும், முருங்கை காய் 80 ரூபாய் முதல் நூறு ரூபாய்க்கும், பச்சை மிளகாய் 100 - 120, சீனி அவரை 60-70, வெள்ளரி 40-50 க்கும், பூசணி ஒரு கிலோ 4 ரூபாய்க்கும் விற்பனையானது.

**உடன்குடியில் விவசாயத்தை மேம்படுத்த விழிப்புணர்வு கருத்தரங்கம்**

உடன்கு: உடன்குடியில் இயற்கை விவசாயத்தை மேம்படுத்திட வலியுறுத்தி மனித சங்கிலி மற்றும் விழிப்புணர்வு கருத்தரங்கம் நடந்தது.தமிழ்நாடு, பாண்டிச்சேரி இயற்கை வேளாண் இந்தியா, தென்மண்டல ஐவிஜ, வீட்ஸ், ஹளப்ஒ, அவார்டு, ரைஸ், ஐடிஎஸ் இணைந்து உடன்குடியில் இயற்கை விவசாயத்தை மேம்படுத்திட வலியுறுத்தி மனித சங்கிலி நடந்தது.

இதனைத் தொடர்ந்து உடன்குடி கிறிஸ்தியாநகரம் டி.டி.டி.ஏ. நடுநிலைப்பள்ளியில் விழிப்புணர்வு கருத்தரங்கம் நடந்தது.தென்மண்டல ஐவிஜ பிரதிநிதி சார்லஸ் தலைமை வகித்தார். வீட்ஸ் திட்ட ஒருங்கிணைப்பாளர் முருகன் வரவேற்றார். தூத்துக்குடி வேளாண் அலுவலர் ராமலிங்கம், இயற்கை வேளாண் இந்தியா மாநில பொருளாளர் ராஜீ, செங்கோட்டை வேளாண் அலுவலர் ஜெயசுதா, தூத்துக்குடி தெற்கு மாவட்ட விவசாய நல சங்க தலைவர் ராஜ மார்த்தாண்டம், தெய்வச்செயல்புரம் அவார்டு இயக்குநர் தானுலிங்கம், தூத்துக்குடி ஹச்.எப்.ஒ. இயக்குநர் சில்வெஸ்டர், கன்னியாகுமரி ஐடிஎஸ் பணியாளர் ரமா ஆகியோர் கலந்து கொண்டு பேசினர்.

கருத்தரங்கில் நமது முன்னோர் செய்து வந்த இயற்கை விவசாயத்தை தொடர்ந்து செய்ய வேண்டும், நிலம் உள்ள அனைத்து விவசாயிகளும் மாதிரி இயற்கை விவசாய தோட்டம் அமைக்க வேண்டும், மண்புழு உரம், இயற்கை உரங்கள் தயாரிக்க வேண்டும் உட்பட பல தீர்மானங்கள் நிறைவேற்றினர். மனித சங்கிலி மற்றும் கருத்தரங்கில் சுமார் 350க்கும் மேற்பட்ட விவசாயிகள் கலந்து கொண்டனர். இறுதியில் திட்ட ஒருங்கிணைப்பாளர் ஐயப்பன் நன்றி கூறினார்.

**புளியங்குடியில் உளுந்து சாகுபடி தொழில்நுட்ப கருத்தரங்கு**

வல்லநாடு,: கிள்ளிகுளம் வேளாண்மை கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம் சார்பாக புளியங்குடியில் உளுந்து சாகுபடி தொழில்நுட்ப கருத்தரங்கு நடந்தது.
உலகவங்கி நிதி உதவியுடன் செயல்படும் தமிழ்நாடு நீர்வள நிலவள திட்டம் தமிழ்நாடு வேளாண்மை பல்கலைகழகத்தின் சார்பாக கிள்ளிகுளம் வேளாண்மை கல்லூரியில் செயல்பட்டு வருகிறது. கருத்தரங்கை புளியங்குடி விவசாயி பாலசுப்பிரமணியன் துவக்கி வைத்தார். பேராசிரியர் ஆறுமுகம் உளுந்து சாகுபடி செய்வதற்கு ஜனவரி மாதம் ஏற்ற பருவம் ஏடிடீ 5 மற்றும் டிஎம்வி 1 ரகங்கள் நெல் தரிசில் உளுந்து சாகுபடிக்கு உகந்தவை என்று கூறினார். மேலும் மஞ்சள் நோய் தாக்கம் அதிகமாக இருந்தால், நோய் தாக்க எதிர்ப்புதிறன் கொண்ட வம்பன் 3, வம்பன் 4 மற்றும் வம்பன் 5 உகந்த ரகங்கள் என்று கூறினார்.

உழவியல் துறை உதவி பேராசிரியர் ஜோசப் உளுந்து 20 கிலோ விதையுடன் ஒரு ஹெக்டேருக்கு ரைசோபியம் 3 பாக்கெட், பாஸ்போபாக்டீரியா 3 பாக்கெட் மற்றும் ஆறிய கஞ்சியுடன் கலந்து விதை நேர்த்தி செய்து 15 முதல் 30 நிமிடங்கள் நிழலில் உலரவைக்க வேண்டும் என்று விதை நேர்த்தி செயல்விளக்கத்தை செய்து காட்டினார். உழவியல் துறை உதவி பேராசிரியர் முனைவர் செந்திவேலு நெல் தரிசில் உளுந்து சாகுபடிகளுக்கு 2 சதவீதம் டிஏபி கரைசலை பூக்கும் தருணத்திலும் மற்றும் 15 நாட்கள் கழித்தும் செடி நன்கு நனையுமாறு தெளிக்க வேண்டும் என்று இலை மூலம் ஊட்டச்சத்து மேலாண்மை செய்வது பற்றி பேசினார்.

முதுநிலை ஆராய்ச்சியாளர் ஆறுமுகபெருமாள் வேளாண்மை கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம் பயிறுவகை சாகுபடியில் ஒருங்கிணைந்த ஊட்டச்சத்து மற்றும் களை நிர்வாகம் பற்றி பேசினார். இதில் 50 க்கும் மேற்பட்ட விவசாயிகள் கலந்து கொண்டனர். புளியங்குடி விவசாயி முருகன் நன்றி கூறினார். ஏற்பாடுகளை முதுநிலை ஆராய்ச்சியாளர்கள் ஆறுமுகப்பெருமாள் மற்றும் பாண்டிச்செ ல்வி ஆகியோர் செய்தனர்.

**எண்ணெய் வித்துக்கள் விதை கிராம திட்ட பயிற்சி**

திருநெல்வேலி:மானூர் வட்டாரம் ராஜபதி கிராமத்தில் எண்ணெய் வித்துக்கள் விதை கிராம திட்ட பயிற்சி நடந்தது.பயிற்சியில் மானூர் வேளாண்மை உதவி இயக்குநர் முருகேஸ் வரவேற்றார். மானூர் யூனியன் தலைவர் மணி, வேளாண்மை விற்பனைக் குழு துணைத் தலைவர் அருள்மணி முன்னிலை வகித்தனர். 50 விவசாயிகள் கலந்து கொண்டனர்.பயிற்சியில் நெல்லை விதைச்சான்று அலுவலர் வேலுச்சாமி எண்ணெய் வித்து பயிர்களில் தரமான விதை உற்பத்தி செய்வது பற்றியும், மானூர் வேளாண்மை அலுவலர் கிருஷ்ணகுமார் சாகுபடி தொழில் நுட்பம் பற்றியும் கூறினர். வேளாண்மை அலுவலர் மலர்விழி நன்றி கூறினார்.ஏற்பாடுகளை உதவி வேளாண்மை அலுவலர் ராஜா செய்திருந்தார்.

**நெற்பயிரில் படைப்புழு தாக்குதல்:கட்டுப்படுத்தும் முறைகள்**

திருநெல்வேலி:நெற்பயிரில் படைப்புழுக்கள் தாக்குதலை கட்டுப்படுத்தும் முறைகள் குறித்து மானூர் வேளாண்மை உதவி இயக்குநர் முருகேஸ் தெரிவித்துள்ளார்.இதுகுறித்து அவர் அறிக்கையில் கூறியிருப்பதாவது:மானூர் வட்டத்திற்குட்பட்ட கங்கைகொண்டான், குப்புக்குறிச்சி, கல்குறிச்சி, பாலாமடை, மாவடி, மானூர் உள்ளிட்ட பல பகுதிகளில் பெற்பயிரில் படைப்புழுக்கள் தாக்குதல் பரவலாக காணப்படுகிறது.மானூர், மாவடி நீங்கலாக மற்ற கிராமங்களில் நெற்பயிர் முதிர்ச்சி பருவம் மற்றும் அறுவடை நிலையிலும், மானூர், மாவடி கிராமங்களில் நடவு முதல் முதிர்ச்சி பருவம் வரை நெல்பயிர் உள்ளது.

இப்பயிரில் முன் எப்போதும் இல்லாத நிலையில் நடப்பு ஆண்டில் படைப்புழுக்களின் தாக்குதல் காணப்படுகிறது.இப்புழுக்கள் இளம் பருவத்தில் பச்சை நிறத்திலும், வளர்ந்த நிலையில் பழுப்பு நிறத்திலும் காணப்படும். பகல் நேரங்களில் பெரும்பாலும் இப்புழுக்களை காண முடியாது. இவை மண் வெடிப்புகளிலும், பயிரின் தூர் பகுதியிலும் ஒழிந்து கொள்ளும். இரவு நேரங்களில் வெளியே வந்து இலைகள், இளம்குருத்து பகுதி ஆகியவற்றை முழுமையாக கடித்து தின்றுவிடும். இதனால் பெருமளவில் மகசூல் பாதிப்புக்குள்ளாகும். இவை கூட்டம் கூட்டமாக காணப்படுவதால் படைபுழுக்கள் என அழைக்கப்படுகிறது.இவற்றை கட்டுப்படுத்த வயலை கிழக்கு மேற்காக 6 அடிக்கு ஒருமுறை வகுந்து விட வேண்டும்.

தாக்கப்பட்ட வயலில் தண்ணீர் கட்டி மண்ணெண்ணெய் விட்டு புழுக்களை சுவாசிக்க விடாமல் தடுக்க வேண்டும். வகுந்து விட்ட பாதை வழியாக மாலை வேளையில் கைத்தெளிப்பான் கொண்டு புரப்பினோபாஸ் (400மிலி/ஏக்கர்) அல்லது எண்டோசல்பான் (300மிலி/ஏக்கர்) அல்லது குளோரிபைரிபாஸ் (400மிலி/ஏக்கர்) மருந்து ஒன்றை 200 லிட்டர் தண்ணீரில் கலந்து தூர் பகுதியில் மருந்து படும்படியாக தெளிக்க வேண்டும்.இவ்வாறு மானூர் வேளாண்மை உதவி இயக்குநர் முருகேஸ் தெரிவித்துள்ளார்.

**சிவகாசியில் 600 எக்டேர் நிலம் பயன்பெற நீர்வடிப்பகுதி திட்டம் துவக்கம்**

சிவகாசி: சிவகாசி ஒன்றியம், நாரணாபுரத்தில் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை சார்பில், ஒருங்கிணைந்த நீர்வடிப்பகுதி மேலாண்மை திட்டத்தின் மக்கள் பங்கேற்பு கூட்டம் நடந்தது. ஊராட்சி தலைவர் சுபாஷினி தலைமை வகித்தார். திட்ட பொருளியளார் கணேசன் திட்டத்தை துவக்கி வைத்து பேசியதாவது:

இத் திட்டம் மக்கள் பங்கேற்புடன் ஏழு ஆண்டுகள் செயல்படுத்தப்படும். நாரணாபுரத்தில் 400 எக்டேரும், அனுப்பங்குளத்தில் 200 எக்டேர் நிலத்தை வளமாக்க தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். நீர்வடிப் பகுதியில் உள்ள ஊரணி, ஓடைகள், வாய்க்கால்கள் தூர்வாரி, கரைகள் பலப்படுத்தப்படும்.

இத் திட்டம் 72 லட்ச ரூபாயில் மேற்கொள்ளப்படும். புதிய ஊரணிகள், எட்டு பண்ணைக்குட்டைகள், தடுப்பணைகள் அமைக்கலாம். 60 ஏக்கரில் பழக்கன்றுகள், 50 ஏக்கரில் வறட்சியை தாங்கக் கூடிய மரங்கள் வளர்க்கப்படும். பொதுஇடமாக இருந்தால், ஏழு ஏக்கரில் மரக்கன்றுகள் நட்டு பராமரிக்கப்படும்.நுழைவு முகப்பு பணி என திட்டம் துவங்கியவுடன் வேலை செய்வதற்காக, இக்கிராமத்தின் பள்ளி காம்பவுண்ட் சுவர், அனுப்பங்குளத்தில் கதிர் அடிக்கும் களம் கட்டப்பட உள்ளது. இப்பணிகள் மிக விரைவாக துவங்கும். இதுபோன்ற வளர்ச்சி பணிகள் தொடர்ந்து ஏழு ஆண்டுகள் நடைபெறும். இத் திட்டத்தில் மக்களுக்கு தேவையான பணிகளை, மக்களே தேர்வு செய்து பலன் பெறுவர், என்றார். உதவி பொறியாளர் சவுந்திரபாண்டியன், சமூகவியலாளர்கள் வரதராஜபாண்டியன், ஜெயந்தி, மணிகண்டன், கிராம பிரமுகர்கள் ராமலிங்கம், அழகர்சாமி மற்றும் நீர்வடிப்பகுதி உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.

**ஏலத்துக்கு பருத்தி வரத்து குறைந்தது : டி.சி.எச்., விலை தொடர்ந்து உயர்வு**

அவிநாசி: அவிநாசியில் நடந்த பருத்தி ஏலத்துக்கு வரத்து குறைந்துள்ளது. இருப்பினும், டி.சி.எச்., உள்ளிட்ட முக்கிய ரகங்களின் விலை அதிகரித்திருந்தது.அவிநாசி வேளாண் உற்பத்தியாளர் கூட்டுறவு விற்பனை சங்கத்தில் நடந்த பருத்தி ஏலத்துக்கு 5,500 மூட்டை வரத்தாக இருந்தது. இது, கடந்த வாரத்தை காட்டிலும் 1,200 மூட்டை குறைவு. வரத்து குறைந்திருந்தாலும் கூட, டி.சி.எச்., ஆர்.சி.எச்., பென்னி ரக பருத்தி கடந்த வாரத்தை காட்டிலும் இந்த வாரம் கூடுதலான விலைக்கு ஏலத்தில் எடுக்கப்பட்டது. டி.சி.எச்., ரகத்தின் விலை வாரத்துக்கு வாரம் தொடர்ந்து அதிகரித்து வருகிறது. இந்த சீசனிலேயே குவிண்டாலுக்கு அதிகபட்ச விலையாக ரூ.4,850க்கு ஏலம் போனது.இந்த வார ஏலத்தில் அனைத்து ரக பருத்தி விலை விபரம் (குவிண்டாலுக்கு) வருமாறு:எல்.ஆர்.ஏ., ரூ.3,000 முதல் ரூ.3,350 வரை, டி.சி.எச்., ரூ.4,100 முதல் ரூ.4,850 வரை, ஆர்.சி.எச்., மற்றும் பென்னி ரூ.3,150 முதல் ரூ.3,500 வரை, மட்டம் ரூ.1,700 முதல் ரூ.2,000 வரை.

ஏலம் குறித்து அவிநாசி கூட்டுறவு விற்பனை சங்க தனி அலுவலர் பழனிசாமி கூறியதாவது: இந்த வார பருத்தி ஏலத்துக்கு வரத்து சற்று குறைந்தது. இருந்தாலும், அனைத்து ரகங்களுக்கு நல்ல விலைக்கு ஏலம் போயின.திண்டுக்கல் புதுப்பட்டி, பென்னாகரம், கோபி அருகே திங்களூர், சிறுவலூர், கிணத்துக்கடவு ஆகிய பகுதிகளைச் சேர்ந்த 212 விவசாயிகள், அன்னூர், கோவை, திருப்பூர், அவிநாசி ஆகிய பகுதிகளைச் சேர்ந்த 15 வியாபாரிகள் ஏலத்தில் பங்கேற்றனர். இந்த வாரம் ரூ.62.44 லட்சத்துக்கு வர்த்தகம் நடந்தது, என்றார்.

**பட்டு வளர்க்க செயல்விளக்கம்**

உடுமலை: ஆத்மா திட்டத்தில், பட்டு வளர்ப்பு தொழிலை ஊக்குவிக்க செயல்விளக்க முகாம், குடிமங்கலத்தில் நடத்தப்பட்டது.குடிமங்கலத்தில் நடந்த கூட்டத்துக்கு, பட்டு வளர்ச்சி துறை உதவி இயக்குனர் பன்னீர்செல்வம் தலைமை வகித்தார். உதவி ஆய்வாளர் குலாம் முகமது வரவேற்றார்.மத்திய பட்டு வாரிய விஞ்ஞானி புனிதவதி பேசியதாவது:விவசாயம் சார்ந்த தொழில்களில் பட்டு வளர்ப்பு தொழில் விவசாயிகளுக்கு லாபகரமானதாக உள் ளது. மல்பெரி நடவு முதல் பட்டுப்புழு வளர்ப்புக்கு தேவையான ஆலோசனைகளும், மானியங்களும் மத்திய, மாநில அரசுகளால் வழங்கப்படுகின்றன.

பப்பாளி மாவுப்பூச்சி தாக்குதலால் உற்பத்தி பாதிக்கப்படாமல் இருக்க, விவசாயிகள் ஒருங் கிணைந்து நோய் தடுப்பு பணியை மேற்கொள்ள வேண்டும். நோய் தாக்குதல் துவங்கியதும் சம்பந்தப்பட்ட கள அலுவலர்களுக்கு தகவல் அளிக்க வேண்டும். நோய் தாக்குதலை கட்டுப் படுத்த தேவையான ஆலோசனை விவசாயிகளுக்கு அளிக்கப்படும். விவசாயிகள் இடையே பப்பாளி மாவுப்பூச்சி தாக்குதல் குறித்த விழிப்புணர்வு இருந்தால், பிற பகுதிகளுக்கு நோய் பரவுவதை எளிதில் தடுக்க முடியும், என்றார்.விவசாயிகளுக்கு மானியத்திட்டத்தில் கிருமி நாசினிகள் வழங்கப்பட்டன. விவசாயிகள் மற்றும் அதிகாரிகள் இடையே தொழில்நுட்ப கருத்து பரிமாற்றம் நடந்தது.

**உள்ளூர் சந்தையில் பட்டுக்கூடு கொள்முதல் குறைந்தது : சீனா இறக்குமதி அதிகரிக்கும் வாய்ப்பு எதிரொலி**

உடுமலை: சீனாவில் இருந்து பட்டு நூலிழை இறக்குமதி அதிகரிக்கும் வாய்ப்புள்ளதாக கூறி, ரீலர்கள் உள்ளூர் சந்தையில் பட்டுக்கூடுகள் கொள்முதலை குறைத்துள்ளனர். இதனால், பல ஆயிரம் டன் கூடுகள் தேங்கி, விலை வேகமாக சரிந்து வருகிறது. இந்தியாவின் பட்டுத்துணிகள் உற்பத்திக்கு தேவையான கச்சா பட்டு, சீனாவில் இருந்து அதிகளவு இறக்குமதி செய்யப்படுகிறது. உள்ளூர் உற்பத்தியை அதிகரிக்க, வெண்பட்டுக்கூடுகள் வளர்ப்பை மத்திய அரசு ஊக்குவித்தது. தமிழகத்தில் வெண்பட்டுக்கூடுகள் வளர்ப்பில் கோபி, உடுமலை, பழனி, ஒசூர் உள்ளிட்ட பகுதிகள் முன்னணியில் உள்ளன. நாள்தோறும் ஆயிரக்கணக்கான கிலோ கூடுகள், இப்பகுதிகளில் இருந்து கர்நாடகாவுக்கு விற்பனைக்கு சென்று வருகின்றன.

நிலையான விலை கிடைக்காதது உள்ளிட்ட பிரச்னைகளால், கடந்தாண்டு வரை விவசாயிகள் வெண் பட்டுக்கூடு வளர்க்க தயக்கம் காட்டினர். இந்நிலையில், மத்திய அரசு கச்சா பட்டு இறக்குமதிக்கு கட்டுப்பாடுகளை அதிகரித்தது மற்றும் இயற்கை சீற்றங்களால் சீனா உற்பத்தி பாதிப்பு ஆகிய காரணங்களால் உள்ளூர் கூடுகளுக்கு நல்ல விலை கிடைக்க துவங்கியது.கிலோ 130 ரூபாயில் இருந்து விலை 260 ரூபாய் வரை வேகமாக உயர்ந்தது. சராசரியாக, கிலோவுக்கு 250 ரூபாய் விலை நிலையாக பல மாதங்கள் நீடித்தது.

இதனால், வெண்பட்டுக்கூடு வளர்ப்பு தமிழகத்தின் பல பகுதிகளிலும் அதிகரித்தது. சில மாதங்களாக, கர்நாடகா கொள்முதல் மையத்தில் வெண்பட்டுக்கூடுகள் விலை குறையவில்லை. இதனால், பட்டுக்கூடு உற்பத்தியாளர்கள் மகிழ்ச்சி அடைந்திருந்தனர். ஒரு வாரமாக கர்நாடகா மையத்தில் ரீலர்கள் கொள்முதலை முற்றிலுமாக நிறுத்தினர்.தமிழகத்தில் இருந்து பட்டுக்கூடுகளை எடுத்துச் சென்ற உற்பத்தியாளர்கள், பல நாட்கள் காத்திருந்து விற்பனை செய்ய வேண்டிய அவல நிலை ஏற்பட்டது. வெளிமாநில மார்க்கெட் கொள்முதல் குறைப்பு உள்ளூர் மையங்களிலும் பாதிப்பை ஏற்படுத்தியது.கோவை, தர்மபுரி உட்பட கொள்முதல் மையங்களிலும் கடந்த ஒரு வாரமாக ரீலர்கள் கொள்முதலை குறைத்துள்ளனர்.

இதனால், பட்டுக்கூடுகளின் விலை பல மடங்கு குறைந்து உற்பத்தியாளர்களுக்கு அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. கடந்த ஒரு வாரத்தில் கிலோவுக்கு 80 ரூபாய் வரை விலை குறைந்துள்ளது. தரமான கூடுகளுக்கு அதிகபட்சமாக 210 ரூபாய் விலை கிடைத்து வருகிறது. உள்ளூர் மையங்களில் 200 ரூபாய் மட்டுமே விலை கிடைக்கிறது.விலை சரிவால் பட்டுக்கூடு உற்பத்தியாளர்கள் அதிர்ச்சி அடைந்துள்ளனர். தட்பவெப்ப நிலை மாற்றம், தொழிலாளர் பற்றாக்குறை போன்ற இடையூறுகளை தாண்டி, உற்பத்தி செய்த கூடுகளுக்கு விலை குறைந்துள்ளதால் நஷ்டம் ஏற்படும் நிலை உள்ளது.பட்டுக்கூடு உற்பத்தியாளர்கள் கூறியதாவது:கர்நாடகா கொள்முதல் மையத்தில் ரீலர்கள் கொள்முதலை முற்றிலுமாக குறைத்துள்ளனர்.

கச்சா பட்டு இறக்குமதி அதிகரிக்கப்படும் என்ற மத்திய அரசு அறிவிப்பால், உள்ளூரில் உற்பத்தி செய்யப்படும் நூலிழைக்கு விலை கிடைக்காது என்பதால் ரீலர்கள் கொள்முதலை குறைத்துள்ளனர்.
இறக்குமதி குறித்து மத்திய அரசு உரிய விளக்கம் அளித்தால் மட்டுமே "ரீலர்கள்' முழு உற்பத்தியில் ஈடுபடும் வாய்ப்புள்ளது. அதுவரை வெண்பட்டுக்கூடுகளுக்கு விலை கிடைப்பது கேள்விக்குறியாகியுள்ளது. கோடை காலத்தில் உற்பத்தி செலவு பல மடங்கு அதிகரிக்கும் நிலையில் விலை கிடைக்காவிட்டால் நஷ்டம் அதிகரிக்கும். இப்பிரச்னைக்கு தீர்வாக பட்டுக்கூடுகளுக்கு ஆதார விலை நிர்ணயித்து அரசே கொள்முதல் செய்ய முன்வர வேண்டும் இவ்வாறு, உற்பத்தியாளர்கள் தெரிவித்தனர்.

**வாழைக்கு சொட்டு நீர் பாசனம் : விவசாயிகளுக்கு செயல் விளக்கம்**

திருப்பூர்: வாழைக்கு சொட்டு நீர் பாசனம் அளிப்பது தொடர்பாக, தோட்டக்கலைத்துறை ஏற்பாடு செய்த, விவசாயிகள் சுற்றுலாவில் 125 பேர் பங்கேற்றனர்.வாழை பயிருக்கு சொட்டு நீர் பாசனம் அமைப்பது தொடர்பான சுற்றுலாவுக்கு, திருப்பூர் தோட்டக்கலைத்துறை ஆத்மா திட்டத்தில், விவசாயிகள் அழைத்து செல்லப்பட்டனர். அம்மாபேட்டை, சென்னம்பட்டி, ஜரத்தல், சனிசந்தை பகுதிகளுக்கு விவசாயிகள் சென்றனர்.

தோட்டக்கலை துறை அதிகாரி சந்தானகிருஷ்ணன் கூறியதாவது:திருப்பூரில் இருந்து 125 விவசாயிகள் சுற்றுலா அழைத்து செல்லப்பட்டனர். சொட்டு நீர் பாசனம் அமைக்கப்பட்ட முறைகளை அறிந்து கொண்டனர். சந்தேகங்களை, சக விவசாயிகளுடன் கலந்து, தெளிவு பெற்றனர்.வாழை மட்டுமின்றி பப்பாளி, மக்காச்சோள பயிர்களுக்கும் அமைக்கப்பட்டுள்ள சொட்டு நீர் பாசன முறையையும் பார்வையிட்டனர். சொட்டு நீர் பாசனம் அமைப்பதன் மூலம் பயிர்களின் எண்ணிக்கை அதிகமாவதையும், மகசூல் அதிகரிப்பதையும் தெரிந்து கொண்டனர்.இவ்வாறு, சந்தானகிருஷ்ணன் கூறினார்.

---

தினத் தந்தி

DAILY THANTHI

வெல்க தமிழ்



பிக்கைகண்டியில்

## விவசாயிகளுக்கு பயிற்சி

ஊட்டி, மார்ச்.12–

ஊட்டி தாலுகா பிக்கைகண்டி கிராமப்புற பயிற்சி கூட்டம் நடைபெற்றது. இதில் 25 விவசாயிகள் கலந்து கொண்டு பயன் அடைந்தனர். இந்த கிராமப்புற பயிற்சியில் கொய்மலர் சாகுபடி குறித்து பயிற்சியும், திட்டப்பணிகள் மற்றும் மானியம் குறித்த பயிற்சியும், தேயிலை சாகுபடி, உரமிடல், பயிர் பாதுகாப்பு, தேயிலை பறித்தல், கவாத்து செய்தல் குறித்த பயிற்சியும், மண் பரிசோதனை குறித்து பயிற்சியும், மண்புழு உரம் தயார் செய்தல், காய்கறி சாகுபடி குறித்த பயிற்சியும் அளித்து செயல் விளக்கங்கள் செய்து காண்பிக்கப்பட்டது.

பயிற்சியில் தோட்டக்கலை உதவி இயக்குனர் வி.குணசேகரன், துணை வேளாண்மை அலுவலர் ஆர்.டி.ராஜன், உதவி பயிற்சியாளர் சிவானந்தம், உதவி வேளாண்மை அலுவலர்கள் பி.மோகன், பி.மூர்த்தி மற்றும் விவசாயிகள் கலந்து கொண்டனர். பயிற்சியின் போது தேயிலையில் சிலந்தி பூச்சியை கட்டுப்படுத்த ஒரு ஏக்கருக்கு ஓமைட் 160 மில்லி மருந்தை 160 லிட்டர் நீரில் கலந்து கைத்தெளிப்பான் மூலம் தெளித்து கட்டுப்படுத்துமாறு உதவி பயிற்சியாளர் சிவானந்தம் கூறினார்.

இந்த தகவலை ஊட்டி உழவர் பயிற்சி நிலைய தோட்டக்கலை உதவி இயக்குனர் குணசேகரன் தெரிவித்துள்ளார்.

# அறுவடை செய்த தேங்காயை உடனே விற்க வேண்டும்

## விவசாயிகளுக்கு வேளாண் பல்கலைக்கழகம் ஆலோசனை

கோவை,மார்ச்.12-

அறுவடை செய்த தேங்காய்களை உடனே விற்க வேண்டும் என்று விவசாயிகளுக்கு வேளாண் பல்கலைக்கழகம் ஆலோசனை வழங்கி உள்ளது.

**உற்பத்தியில் முன்னிலை**

உலக அளவில் தேங்காய் உற்பத்தியில் இந்தியா, பிலிப்பைன்ஸ், இந்தோனேசியா, ஆகிய நாடுகள் முன்னிலை வகிக்கின்றன. இலங்கை, மெக்சிகோ, வியட்னாம், நியூகினியா மற்றும் பிரேசில் ஆகிய நாடுகளும் தேங்காய் உற்பத்தி செய்கின்றன. மொத்த தேங்காய் உற்பத்தியில் 47 சதவீதம் சமையலுக்காகவும், 35 சதவீதம் தேங்காய் எண்ணெய்க்கும், 11 சதவீதம் இளநீருக்கும், மீதம் உள்ள 7 சதவீதம் கொப்பரைக்காகவும் பயன்படுகிறது.

ஆசிய பசிபிக் தேங்காய் குழுமக்குழுபடி தேங்காய் உற்பத்தி திறன் வரிசையில் இந்தியா முதல் இடத்தில் உள்ளது. மேலும் உற்பத்தி திறனில் ஏற்பட்ட அதிரடி உயர்வு இந்தியாவை உலக உற்பத்தியாளர்கள் வரிசையில் முதல் இடம் பெற செய்துள்ளது. நமது நாட்டை பொறுத்தவரை கேரளாவில் .87 மில்லியன் எக்டேரிலும், கர்நாடகாவில் .40 மில்லியன் எக்டேரிலும் தமிழ்நாட்டில் .37 மில்லியன் எக்டேரிலும் தென்னை பயிரிடப்படுகிறது.

தமிழ்நாட்டில் ஒரு எக்டேரில் 14 ஆயிரத்து 495 தேங்காயும், ஆந்திராவில் 12 ஆயிரத்து 629 காய்களையும் உற்பத்தி செய்கின்றன. தமிழ்நாட்டில் கோவை, தஞ்சாவூர், திண்டுக்கல், கன்னியாகுமரி, வேலூர், ஈரோடு, தேனி, திருநெல்வேலி, கிருஷ்ணகிரி, சேலம் மற்றும் மதுரை ஆகிய மாவட்டங்களில் தென்னை அதிக அளவில் பயிரிடப்படுகிறது.

**சந்தை தகவல் மையம் ஆய்வு**

தமிழகத்தில் உள்ள தேங்காய் விவசாயிகள் மத்திய அரசினால் அதிகப்படியாக இறக்குமதி செய்யும் பாமாயில் காரணமாக வரும் மாதங்களில் தேங்காய் விலை குறையுமா? அல்லது அறுவடை செய்த தேங்காயை உடனடியாக விற்பதா? அல்லது சேமித்து விற்பதா? என்ற சந்தேகத்தில் உள்ளனர். இவர்களின் சந்தேகத்துக்கு விடை அளிக்கும் விதத்தில் வேளாண் பல்கலைக்கழகத்தில் உள்ள ஊரக மேம்பாட்டு ஆய்வு மையத்தில் இயங்கி வரும் உள்நாட்டு ஏற்றுமதி சந்தை தகவல் மையம் கடந்த 10 ஆண்டுகளாக பொள்ளாச்சி மற்றும் அவல்பூந்துறை சந்தைகளை ஆய்வு செய்தது.



மொத்த தேங்காய் உற்பத்தியில் 35 சதவீதம் தேங்காய் எண்ணை தயாரிக்க பயன்படுகிறது. மேலும் தேங்காய் சார்ந்த பொருளாதார நடவடிக்கைகள் தேங்காய் எண்ணை விலையை பொறுத்தே அமைகின்றன. மத்திய அரசு கடந்த ஆண்டு நவம்பர் முதல் இந்த ஆண்டு ஜனவரி வரை 14 லட்சத்து 39 ஆயிரத்து 705 டன் பாமாயிலை இறக்குமதி செய்தது. இது சென்ற ஆண்டை காட்டிலும் 2 சதவீதம் அதிகமாகும்.

**கொப்பரை சந்தை**

அவல்பூந்துறை ஒழுங்குமுறை விற்பனை சந்தை, தமிழகத்தில் உள்ள மிகப்பெரிய கொப்பரை சந்தை ஆகும். விவசாயிகள் அதிக அளவிலான கொப்பரையை இந்த சந்தைக்கு கொண்டு வந்து விற்பனை செய்கின்றனர். குறிப்பாக வெள்ளை தேங்காயைவிட கறுப்பு தேங்காய் விலை அதிகம் என்று வியாபாரிகள் தெரிவிக்கின்றனர். இந்த கறுப்பு நிற தேங்காய் கொப்பரை உற்பத்திக்காக பயன்படுகிறது. தேங்காயில் இருந்த கொப்பரை 17 சதவீதமும், கொப்பரையில் இருந்து தேங்காய் எண்ணெய் 60 முதல் 65 சதவீதமும் கிடைக்கிறது.

கோவை, மதுரை, திருச்சி, சென்னை போன்ற நகரங்களில் இளநீரின் தேவை தற்போது அதிகரித்து வருகிறது. இளநீருக்காக விவசாயிகள் குறுகிய காலங்களில் பலன் தரும் ரகங்களையே நடவு செய்கின்றனர்.

**இளநீர் தேவை**

கடந்த மாதம் முதல் வருகிற ஜூன் மாதம் முடிய தேங்காய் வரத்து அதிகமாகவும், ஜூலை முதல் டிசம்பர் முடிய தேங்காய் வரத்து குறைவாகவும் இருக்கும் என வியாபார மூலங்கள் தெரிவிக்கின்றன. உத்திரபிரதேசம், பீகார், ஆந்திரா, கர்நாடகா மற்றும் கேரள மாநிலங்களில் இருந்து வியாபாரிகள் தேங்காயை அதிக அளவில் கொள்முதல் செய்கின்றனர். இந்த மாதம் முதல் ஜூன் மாதம் வரை தேங்காய் வரத்து அதிக அளவில் இருக்கும். இதன் காரணமாக தேங்காய் விலை இறங்குமுகமாக இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

அதே சமயத்தில் கோடை காலத்தில் இளநீர் தேவை அதிகமாக இருப்பதால் வரும் மாதங்களில் தேங்காய்க்கு நிலையான தேவை இருக்கும். இதன் காரணமாக விலையில் எந்த மாற்றமும் இருக்காது. உள்நாட்டு மற்றும் ஏற்றுமதி சந்தை தகவல் மைய ஆய்வின்படி இந்த மாதம் முதல் வருகிற ஜூன் வரை தேங்காய் விலை காய் ஒன்றுக்கு 4 ரூபாய் 25 காசு முதல் 4 ரூபாய் 80 காசு வரை நிலவும். மேலும் ஜூன் மாதம் வரை விலை அதிகரிக்கும் வாய்ப்பு இல்லை. எனவே தேங்காயை இருப்பு வைத்துள்ள விவசாயிகள் அவற்றை உடனடியாக விற்பனை செய்வது நல்லது என்று விவசாயிகளுக்கு கோவை வேளாண் பல்கலைக்கழகம் ஆலோசனை வழங்கி உள்ளது.